Deposition of Witness

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

ATHOOR

**CC.No. 34/2023**

**Deposition of PW.11 (LW.12)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செந்தில்குமார் | ஜாதி | : | |
| த/பெ | : | ராஜலிங்கம் | தொழில் | : | காவல் உதவி ஆணையர், உயர்நீதிமன்ற கிளை, மதுரை |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.06.2026.

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் காவல் உதவி ஆணையாளராக வேலை பார்த்து வருகிறேன். நான் கடந்த 07.06.2022 ஆம் தேதி செம்பட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக வேலை பார்த்தபோது, எனது காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக வேலை பார்த்த நாராயணன் என்பவர் நிலைய குற்ற எண்.173/22 சட்டபிரிவுகள் 294(b), 323 இதச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், மற்றும் முதல் நிலை விசாரணை செய்து வைத்திருந்த வழக்கு கோப்பினை 10.06.2022 ஆம் தேதி மேல் விசாரணைக்காக எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்ட போது, சார்பு ஆய்வாளர் நாராயணன் தயார் செய்து வைத்திருந்த பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் போல் இருந்ததால் நான் தனியாக பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்யவில்லை.

சார்பு ஆய்வாளர் நாராயணன் விசாரித்த இவ்வழக்கின் சாட்சிகளை நான் விசாரித்தபோது அவரிடம் சொன்னது போது என்னிடம் சொன்னதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகளான தங்கபாண்டி, அருண்குமார் ஆகியோர்களை கடந்த 11.06.2022

ஆம் தேதி காலை 09.15 மணியளவில் சித்தையன்கோட்டை பிரிவில் கைது செய்து, நிலையம் கொண்டு வந்து பாராவில் ஒப்படைத்தேன்.

அன்றையதினமே மேற்படி எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். இவ்வழக்கில் மற்றொரு எதிரியான அருண்குமார் என்பவர் திண்டுக்கல் முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் சரணடைந்து தக்க ஜாமீனில் சென்றுவிட்டார். கடந்த 16.06.2022 ஆம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட வாதியான திருமதி. அருள்மொழி என்பவர் சிகிச்சை பெற்ற தனியார் மருத்துவமனையான சத்யசுபா மருத்துவமனையின் மருத்துவர் திரு. ஷேக் என்பவரை விசாரித்து காயச்சான்று பெற்றேன். அவர் வாதிக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினார். மேற்படி சாட்சியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றையதினமே இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், முதல்நிலை விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் நாராயணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து இவ்வழக்கின் எதிரிகள் மீது கடந்த 16.06.2022 ஆம் தேதி சட்டபிரிவுகள் 294(b), 323 இதச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இவ்வழக்கின் புகார்தாரர் புகார்மனுவை எந்த தேதியில் கொடுத்தார் என்று தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் எதிரிகள் பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அப்பாவின் பெயரை குறிப்பிட்டு அவருடைய மகன் என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. புகார்தாரர் தனது முதல் கணவர் ராஜாராம் என்பவரை விவகாரத்து செய்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றல் இவ்வழக்கிற்கு அது தேவை இல்லை என்பதால் தாக்கல் செய்யவில்லை. முதல் கணவர் ராஜாராம் என்பவரை விவகாரத்து செய்துவிட்டதாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது பொய் என்றால் சரியல்ல. புகார்தாரர் GNM படித்துள்ளேன் என்றும், கோவிட் காலத்தில் பணி திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் பார்த்ததாக புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளார் என்பதற்கு ஆவணங்களை தாக்கல் செய்துள்ளாரா என்றால் சமர்ப்பிக்கவில்லை. அது தேவையில்லை என்பதால் பெறப்படவில்லை.

புகார்தாரர் போலிசார் விசாரணையில் உண்மைக்கு புறம்பான தகவல்களை சொல்லியிருக்கிறார் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் எதிரிகளின் பெயர் எந்த இடத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் குறிப்பிடவில்லை, ஆனால் தகப்பனாரின் பெயர் சொல்லி மகன் என்னு குறிப்பிட்டுள்ளார். எந்த மகன் என்று தனிப்பட்டு முதல் தகவல் அறிக்கையில்

சொல்லவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரர் சம்பவ இடத்திலிருந்து ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு எந்த வாகனத்தில் வந்தார் என்று புகாரிலும், முதல் தகவல் அறிக்கையிலும் குறிப்பிடவில்லை என்றால் வாகனம் எதுவும் குறிப்பிடவில்லை.

நீங்கள் சம்பவ சாட்சிகளை சம்பவ இடத்தில் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரர் பொய்யான புகார் கொடுத்து அதற்கு நீங்கள் பொய்யாக வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. புகார்தாரருக்கு ஏற்பட்ட காயம் எதிரிகளால் ஏற்பட்டது அல்ல என்றால் சரியல்ல. இரவு நேரத்தில் புகார்தாரர் தடுமாறி கீழே விழுந்ததில் ஏற்பட்ட காயம் என்றால் சரியல்ல. 2, 3 எதிரிகளை நீங்கள் சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவ தேதியில், சம்பவ இடத்தில் சம்பவம் நடக்கவில்லை என்றும், 161 வாக்குமூலம் மற்றும் பிற ஆவணங்கள் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், சம்பவ தேதியில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

Typed to my direction in
open court ready over by
me and acknowledged
by him/her to be correct.

DM–Cum–JM,
Athoor